செய்தி வெளியீடு எண். 989 நாள்.18.12.2009

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 36ஆம் இந்திய சுற்றுலா–தொழில் பொருட்காட்சி 2010 தொடக்க விழா 22.12.2009 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சென்னை தீவுத்திடலில் உள்ள அண்ணா கலையரங்கில் 36ஆம் இந்திய சுற்றுலா–தொழில் பொருட்காட்சி–2010 22.12.2009 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 5.30 மணிக்கு தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றுவார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுலா–பதிவுத் துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ் ராஜன் அவர்கள் தலைமையுரையாற்றுவார்கள்.

முன்னதாக, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை செயலர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றுவார்கள்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப. அவர்கள் சிறப்புரையாற்றுவார்கள்.

சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றுவார்கள்.

மாலை 6.00 மணிக்கு திரைப்பட இசையமைப்பாளர் முனைவர் பரத்வாஜ் அவர்களின் "ஆடுவோம் கொண்டாடுவோம்" சிறப்பு கலை நிகழ்ச்சி நடைபெறும்.

இவ்விழாவிற்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை செயலர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப. மற்றும் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப. ஆகியோர் அன்புடன் அழைக்கின்றனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.